***செய்தி வெளியீடு*** ***நாள்:***
**2.1.2025**

***மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும்*** *மாண்புமிகு* ***துணை முதலமைச்சர் அவர்களும்*** *பயன்பாட்டில் இல்லாமல் இருக்கின்ற அனைத்து இடங்களையும் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வருகின்ற வகையில் பூங்காக்கள், விளையாட்டு திடல்கள், நீச்சல் குளங்கள் போன்ற கட்டமைப்புகளை ஏற்படுத்துகின்ற நல்லதொரு சீரிய முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள்.*

***மாண்புமிகு அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் தகவல்***

*****

***மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின்*** *நல்வழிகாட்டுதலின்படி மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் இன்று (2.1.2025) சென்னை, அண்ணா நகர் சட்டமன்ற தொகுதி, மண்டலம்-8, வார்டு-102, சிஎம்டிஏ சார்பில் ஷெனாய் நகர் விளையாட்டுத் திடலை மேம்படுத்தப்பட்டு, அங்கு நடைபெற்று வரும் பணிகள், வில்லிவாக்கம் சட்டமன்ற தொகுதி, மண்டலம்-8, வார்டு-104, அண்ணா நகர் மேற்கு, பிள்ளையார் கோவில் தெரு, வி.ஆர். மால் அருகிலுள்ள சுமார் 4.00 ஏக்கர் ஓ.எஸ்.ஆர் இடத்தை சிஎம்டிஏ சார்பில் மேம்படுத்துவது தொடர்பாக (Development of OSR Land, Near VR Mall, Annanagar) அதனை தொடர்ந்து சென்னை, வில்லிவாக்கம், சிவசக்தி காலனியில், வடசென்னை வளர்ச்சி திட்டத்தின்கீழ் சி.எம்.டி.ஏ. சார்பில் கட்டப்பட்டு வரும் கொளத்தூர் வண்ண மீன்கள் வர்த்தக மையம் மற்றும் சென்னை, கொளத்தூர் சட்டமன்ற தொகுதி, மண்டலம்-6, வார்டு-69, ஜி.கே.எம். காலனி, 15-வது தெருவில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில் கட்டப்பட்டு வரும்* ***முதலமைச்சர் சிறு விளையாட்டு அரங்கத்தின்*** *கட்டுமானப் பணிகளை நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.*

***மாண்புமிகு இந்து சமய அறநிலைத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் செய்தியாளர்களிடம் பேசும்போது தெரிவித்ததாவது :***

*நம்முடைய மாண்புமிகு மேயர் அவர்களின் வாயிலாக வைத்த கோரிக்கைக்கு ஏற்ப Open Space Reserve Land என்கிற OSR அண்ணா நகர் மேற்கு, பிள்ளையார் கோவில் தெரு, வி.ஆர். மால் அருகில் சுமார் 4 ஏக்கர் பரப்பளவு இந்த பகுதியில் அமைந்திருக்கிறது. இந்த பகுதியில் மக்கள் பயன்பாட்டிற்கு திட்டங்களை கொண்டு வருவதற்கு என கோரிக்கை ஏற்று நானும் எங்கள் துறையினுடைய உறுப்பினர் செயலாளர் திரு.அன்சுல் மிஷ்ரா, இ.ஆ.ப., அவர்களும் மாநகராட்சி மத்திய வட்டார துணை ஆணையாளர் திரு.கே.ஜே.பிரவீன் குமார், இ.ஆ.ப., அவர்களும், எங்கள் துறையினுடைய முதன்மை செயல் அலுவலர் திரு.அ.சிவஞானம், இ.ஆ.ப.,அவர்களும் நேரடியாக கள ஆய்வு மேற்கொண்டோம். இந்த நான்கு ஏக்கர் பரப்பளவு கொண்ட இடத்தில் பல்வேறு சிறு சிறு பணிகள் நடைபெற்றிருக்கின்றது. இவை அனைத்தையும் ஒருங்கிணைத்து பிரம்மாண்டமான மக்கள் பயன்பாட்டிற்கு ஏற்ற வகையில் ஒரு திட்ட ஏற்பாடுகளுக்கு கோரிக்கை அடிப்படையில் பல்வேறு வகையில் இந்த பகுதியில் வசிக்கின்ற மக்களுக்கு ஒரு பொழுதுபோக்கு, அதேபோல் உடற்பயிற்சிக்கு முக்கியத்துவம் அளிப்பதுபோல் உடல்நலத்தை பாதுகாப்பதற்குண்டான கட்டமைப்பு உருவாக்கப்படும். இதற்கு முன்பு அண்ணா நகர் ஷெனாய் நகரில் 4 ஏக்கர் பரப்பளவில் கால் பந்து மைதானமும் கூடைப்பந்து மைதானமும் அமைக்கின்ற பணியை பார்வையிட்டு வந்திருக்கின்றோம். இதைத்தொடர்ந்து கொளத்தூர் பகுதியில் 53 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டு வருகின்ற வண்ண மீன்கள் வர்த்தக மையத்தை பார்வையிட செல்ல இருக்கின்றோம், அதைத்தொடர்ந்து தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் கட்டப்பட்டு வருகின்ற முதலமைச்சர் சிறு விளையாட்டு அரங்கத்தில் நீச்சல் குளம், குத்துச்சண்டை அரங்கம் உட்பட 7 கோடி ரூபாய் செலவில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற பணிகளை பார்வையிட இருக்கின்றோம்.*

*திராவிட மாடல் ஆட்சி ஏற்பட்ட பிறகுதான்* ***மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களும்*** *மாண்புமிகு* ***துணை முதலமைச்சர் அவர்களும்*** *பயன்பாட்டில் இல்லாமல் இருக்கின்ற அனைத்து இடங்களையும் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வருகின்ற வகையில் பூங்காக்கள், விளையாட்டு திடல்கள், நீச்சல் குளங்கள் போன்ற கட்டமைப்புகளை ஏற்படுத்துகின்ற நல்லதொரு சீரிய முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள்.*

அந்த வகையில் வட சென்னை வளர்ச்சி திட்டம் எடுத்துக் கொள்ளப்பட்டு இருக்கின்ற வரலாறு காணாத வகையில் சென்னைப் பெருநகர வளர்ச்சி குடும்பத்தை பொருத்தளவில் அதற்கு தந்தை என்றால் **முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை குறிப்பிடலாம்**. அவர் வழியில் இத்துறையில் இதுவரையில் எடுத்துக் கொள்ளப்படாத அளவிற்கு இரண்டாம் ஆண்டுகளில் மட்டும் 192 பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது வடசென்னை வளர்ச்சி திட்டத்தில் சுமார் 2000 கோடி ரூபாய் அளவிற்கு வளர்ச்சி திட்டப்பணிகளை மேற்கொண்டு வருகின்றோம். 228 பணிகள் சுமார் 6000 கோடி ரூபாய்க்கு அதிகமாக பொருட்செலவில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதில் குறிப்பிட்டு சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் ரூ.2000 கோடி அளவிற்கு வளர்ச்சி திட்டப் பணிகளை மேற்கொண்டு வருகின்றது.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடைய கனவு எப்படி நம்முடைய தெற்கு பகுதிகளில் வளர்ச்சிகள் அதிகளவில் இருக்கின்றதோ அதேபோன்ற வளர்ச்சிகள் வடசென்னையிலும் உருவாக்கிட வேண்டுமென்று அவருடைய கனவை நினைவாக்கின்ற வகையில் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமமும் சென்னைப் பெருநகரத்தினுடைய மாநகராட்சியும் இணைந்து இந்த வளர்ச்சி திட்டப் பணிகளை, நடைபெறுகின்ற பணிகளை ஆய்வு செய்வது, புதிய பணிகளுக்கு திட்டமிடுதல், அந்தப் பணிகளுடைய முன்னேற்பாடுகளை, முன்னேற்றத்தை தொடர்ந்து ஆய்வு மேற்கொண்டு தொடர் முயற்சியாக எந்த ஆட்சி காலத்திலும் இல்லாத அளவிற்கு இந்த ஆட்சியில் அனைத்து துறைகளும் ஒருங்கிணைந்து வடசென்னையை வளமான சென்னையாகவும், வாடா சென்னையாகவும் மாற்றுவோம் என்ற கொள்கையோடு மக்கள் பணி ஆற்றிக் கொண்டிருக்கிறோம். நிச்சியம் 2025 ஆம் ஆண்டு நினைவு குழு பல்வேறு பணிகள் மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த ஆய்வுகளின்போது மாண்புமிகு மேயர் திருமதி.ஆர். பிரியா ராஜன் அவர்கள், வில்லிவாக்கம் சட்டமன்ற உறுப்பினர் திரு.வெற்றி அழகன் அவர்கள்,, அண்ணா நகர் சட்டமன்ற உறுப்பினர் திரு.எம்.கே. மோகன் அவர்கள், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் திரு.அன்சுல் மிஸ்ரா, இ.ஆ.ப., அவர்கள், முதன்மை செயல் அலுவலர் திரு.அ.சிவஞானம், இ.ஆ.ப., அவர்கள், கண்காணிப்பு அலுவலர் மற்றும் நகர் ஊரமைப்பு இயக்கக இயக்குநர் திரு.ப.கணேசன், இ.ஆ.ப., அவர்கள், மாநகராட்சி மத்திய வட்டார துணை ஆணையாளர் திரு.கே.ஜே.பிரவீன் குமார், இ.ஆ.ப., அவர்கள், இந்து சமய அறநிலையத்துறை கூடுதல் ஆணையர் டாக்டர் இரா.சுகுமார், இ.ஆ.ப., அவர்கள், மாநகராட்சி மாமன்ற ஆளுங்கட்சித் தலைவர் திரு.நா.ராமலிங்கம், நிலைக் குழுத்தலைவர் (பணிகள்) திரு.நே.சிற்றரசு, மண்டலக் குழுத்தலைவர்கள் திரு.கூ.பீ.ஜெயின், திருமதி.சரிதா மகேஷ்குமார், தலைமைத் திட்ட அமைப்பாளர் திரு.எஸ்.ருத்ரமூர்த்தி, கண்காணிப்புப் பொறியாளர் திரு.ராஜமகேஷ்குமார், மண்டல அலுவலர் திரு.சுரேஷ், திரு.முருகன், உள்ளாட்சி பிரதிநிதிகள் திரு.ஐ.சி.எப்.முரளிதரன், திரு.சந்துரு, திரு.மகேஷ்குமார், திரு.பரமசிவம், மாமன்ற உறுப்பினர்கள் திரு.நாகராஜன், திருமதி.தாவூத்பீ, திருமதி.அமுதா, திருமதி.யோகபிரியா, திருமதி.சாரதா, திருமதி.ஸ்ரீதணி, திருமதி.ஸ்ரீதேவி திருமதி.ராணி ரவிச்சந்திரன், திரு.டி.வி.செம்மொழி மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் உடனிருந்தனர்.